ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/30 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25

2403/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DSWA/LND/4/ACQU1/F1/31.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: எல்டீ/05/2009/யூடீஏ/167.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவின் இல. 455, வலஸ்முல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவின் வலஸ்முல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2013.03.28 ஆம் திகதிய இறுதி கிராம வரைபடத்தின் 163 மற்றும் மேலதிக இல. 40 மற்றும் படிவ இல. 39 இன் கீழ் குறிப்பிடும் துண்டு இல. 586 இன் விபரங்கள் :

01. துண்டு இல. 586

காணியின் பெயர் : பேரும வயல் அல்லது தம்பகஹ முல்ல; விபரம் : பற்றைக்காடு; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : சஞ்ஜய வீரசிங்ஹ, இல. 186, காலி வீதி, ரத்மலான மற்றும் பிரேமாவத்தி வீரசிங்ஹ., இல. 129, மித்தெணிய வீதி, வலஸ்முல்ல; விஸ்தீரணம் : சுமார் 0.1518 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலஸ்முல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குமுது சி. லொகுஹேவாகம,
பிரதேச செயலாளர்,
வலஸ்முல்ல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வலஸ்முல்ல,
2024, செத்தெம்பர் 12.

EOG 09 - 0165

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 03/ஜே/86ஈ/258.
பிரதேச செயலக குறிப்பு இல.: තිප්‍රාලේ/අත්/1/640.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் கீழ் இல. 1621/26 மற்றும் 2009.10.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் அறிவிக்கப்பட்டுள்ள நட்ட ஈட்டுப் பரிசீலனைத் திகதி 2009.11.30 என்பது 2024.11.13 ஆம் திகதி எனவும் உரிமைக்கு சமர்ப்பிக் கப்படும் திகதி 2009.11.23 என்பது 2024.11.06 ஆம் திகதி எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பிரியந்தா திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
2024, செத்தெம்பர் 10.

EOG 09 - 0166